விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 13 வெள்ளிக்கிழமை (29.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 275

# சமாதானப் பேச்சுக் குறித்து ஆராய நோர்வேக் குழு இலங்கை வருகை!



## கிளிநொச்சிக்கும் செல்லும்!

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை அடுத்தமாதம் ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நோர்வேக்குழு அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளது. அக்குழுவில் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் மற்றும் ஜோன் ஹான்சன் பௌயர் ஆகியோர் அடங்குகின்றனர். (04 ஆம் பக்கம் பார்க்க)



# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் மீறுகின்றனர்

## கண்காணிப்புக்குழுத் தலைவர் கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இராணுவமும் விடுதலைப் புலிகளும் மீறுவதாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவர் லார்ஸ் ஜொகான் ஷோல்பெர்க் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அரச, விடுதலைப் புலிகளின் சமாதான செயலகங்களுக்கு அவர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

யூலை 22ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 25 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பாரிய யுத்த நிறுத்த மீறலாகுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான பொது மக்களின் போக்குவரத்தையும் அந்தப் பகுதிகளுக்கு பொருட்களை கொண்டு செல்வதற்கும் அங்கிருந்து வெளியிடங்களுக்கும் பொருட்களைகொண்டுவருவதற்கும் இருதரப்பினராலும் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகள் யுத்த நிறுத்த விதிகளை பாரிய அளவில் மீறுவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் மாவிலாறு அணை மூடப்பட்டமை யுத்த நிறுத்த மீறலுக்கு வழி வகுத்தது என்று (04 ஆம் பக்கம் பார்க்க)

# சாதகமான பதில் கிடைக்கும்வரை சத்தியாக்கிரகப் போர் தொடரும்

### மாவை. எம்.பி.தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாம் நாளாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினர்.

ஏ-9 பாதையைக் திறக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாண மக்களுக்கான உணவுப் பொருட்களை அனுப்பக் கோரியும் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் இருக்கை முன் அமர்ந்து கறுப்புப்பட்டிகளுடன் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினர்.

நாடாளுமன்றத்தில் பிறப்பு இறப்பு திருத்தச் சட்ட மூலத்தின் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஏ-9 பாதை திறப்பு மற்றும் உணவுப் பொருட்களை அனுப்புவது தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து உரிய பதில் கிடைக்கும்வரை போராட்டம் நடைபெறும் என்று நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராசா அறிவித்தார்.

அவர் அறிவித்ததைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் சபாநாயகர் இருக்கை முன்பாக அமர்ந்து அமைதி வழிப் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பிறப்பு (04 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஜனாதிபதி பாகிஸ்தான் பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் மையத்தின் தெற்காசியப் பணிப்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவர் தனது முதற்கட்ட விஜயத்தை பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ளார்.

பாகிஸ்தானில் அவர் அவசர முகாமைத்துவம் என்ற சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அதன் பின் இந்தியாவுக்குச் செல்லும் சந்திரிகா அங்கிருந்து இலங்கைவருவார். (ச)

# வெளிமாவட்ட அரச ஊழியர்களை கடமைக்குத்திரும்புமாறு அறிவிப்பு

## இன்று பயண ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வெளிமாவட்ட அரச ஊழியர்களை, பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட திட்டமிடல் செயலகத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, யாழ். மாவட்டத்தில் தற்பொழுது தங்கி இருக்கும் (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியுடன் பேச்சு நடத்த ஐ.தே.க.முயற்சி

## 4 பேர் கொண்ட குழுவும் நியமனம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யுடன் பேச்சுவார்த்தை நடத்தி பொது வேலைத் திட்டத்தின் கீழ் செயற்படுவது குறித்து ஆராய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பக்கட்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. ஜே.வி.பி.யுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப்பீடம் நான்கு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

இக்குழுவில் (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியாகி லெப்.கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரினது நினைவு தினத்தில் அவர்களது திருவுருவப் படத்திற்குத் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# மக்கள் வங்கிக் கிளையிலிருந்து தேவையான பணத்தைப் பெறலாம்

## பிராந்திய முகாமையாளர் ரகு தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கிகளில் தேவைப்படும் பணத்தை சுலப்மாகப் பெற்றுக் கொள்ளலாம் என பிராந்திய முகாமையாளர் ரகு தெரிவித்தார்.

குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன.

இதன் காரணமாக வங்கிகளின் பணச் சுழற்சியில் கஷ்டநிலை ஏற்பட்டது. வாடிக்கையாளர்கள் பணத்தை மீளப் பெறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டது.

எனினும் தற்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தினமும் பெருந் தொகையான பணம் வைப்புச் செய்யப்படுவதால் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பணத்தை சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் கூறினார். (ச-133)

# முற்பிறப்புக் குறித்த தகவலை தமிழில் கூறும் சிங்கள சிறுவன்

## கொழும்பில் அதிசயம்

சிங்களச் சிறுவன் ஒருவன் தான் முற்பிறப்பில் யாழ்ப்பாணத் தமிழன் என தெரிவித்துள்ளார். நீர்கொழும்பைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு கூறியுள்ளார்.

தான் முற்பிறப்பில் யாழ்ப்பாண ஸ்ரீ பத்திரகாளி கோவிலடியை சேர்ந்த இராமச்சந்திரன் ராஜி என்ற தமிழ்ப் பெண்பிள்ளை எனத் தெரிவித்துள்ளார்.

கட்டான வித்தியாலோக மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் இச் சிங்கள மாணவன் கடந்த 25 ஆம் திகதிமுதல் இவ்வாறு கூறிவருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அத்துடன் பிறந்தது முதல் சிங்களத்தில் பேசி வந்த சிறுவன் தற்போது சிங்களத்தில் பேசாது தமிழில் யாழ்ப்பாண யுத்தம் தொடர்பாகப் பேசி வருவதாகப் பாடசாலையின் அதிபர் கொச்சிக்கடைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இச் சிறுவனின் பெற்றோர்கள் சிங்களவர்கள் எனவும் இவர்கள் கட்டான கபலக சந்திப் பிரதேசத்தில் வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

13 வயதான லக்ஷ்மன் அரவிந்த என்ற அந்தச் சிறுவனுக்கு சகோதரர் ஒருவர் இருக்கிறார். குறித்த சிறுவன் தான் ஒரு பெண்பிள்ளை எனவும் இதனால் பெண்கள் அணியும் பாடசாலை உடையை அணிய அதிபரிடம் அனுமதி கேட்டதாகவும் கூறப்பட்டது.

தற்போது தனது பெயர் ஸ்ரீ இராமச்சந்திரன் ராஜி எனவும் சகோதரனின் பெயர் இராமச்சந்திரன் ரமேஸ்குமார் எனவும் தாயின் பெயர் இராச்சந்திரன் ராசன் எனவும் சிறுவன் கூறியுள்ளார்.

தான் 12 வருடங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டதாகவும் அச் சிறுவன் தெரிவித்துள்ளார். சிங்கள மொழியில் கற்று வந்த அச் சிறுவன் அதனை மறந்து தமிழிலேயே உரையாடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தனது சகோதரனை யார் எனத் தெரியாது எனவும் கூறிவருகிறார். குறித்த சிறுவன் தான் முற்பிறப்பில் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலுக்கருகில் வசித்து வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

தனது தந்தை தன்னையும் தாய் மற்றும் சகோதரனையும் விட்டுப் பிரிந்து சென்ற நிலையில் தாய் தம்மை அழைத்துக் கொண்டு நீர் கொழும்பு பிரதேசத்தில் குடியேறியதாக அச் சிறுவன் கூறியுள்ளார்.

தனது சகோதரனான ரமேஸ்குமார் என்பவர் ரைகம் என்ற நிறுவனத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியதாகவும் ஒரு வருடத்தின் பின் தாயார் வெளிநாடு சென்றதுடன் சகோதரர் தன்னை அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றதாகவும் சிறுவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தபோது சனிக்கிழமை தினம் ஒன்றில் வீடுகள் நெரிசலாகவுள்ள பிரதேசத்தில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது தாம் உயிரிழந்ததாகவும் அச் சிறுவன் கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை காளி கோவிலுக்கு நேர்த்திக் கடனை செலுத்துவதற்கு தனது தாயார் வரும் வரை காத்திருந்ததாகவும் தான் விளையாட தனது சகோதரன் பந்து கொண்டு வருவார் என்றும் அச்சிறுவன் கூறிவருகிறான். தற்போது அச்சிறுவன் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

# இலங்கையிலிருந்து மேலும் 101 அகதிகள் தமிழகம் சென்றனர்

(சென்னை)

இலங்கையிலிருந்து மேலும் 101 பேர் அகதிகளாக தனுஷ்கோடி, அரிச்சல்முனை கடற்கரையைச் சென்றுள்ளனர்.

திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, சல்லி சாம்பல்தீவு ஆகிய பகுதிகளிலிருந்தே இவர்கள் 6 படகுகள் மூலம் சென்றுள்ளனர்.

மன்னார் தாழ்வுப்பாட்டிலிருந்து புறப்பட்டு வந்த இவர்களை தனுஷ்கோடி பொலிஸ் அதிகாரி ராதா விசாரித்தார்.

இதன் பின்னர் மண்டபம் அகதி முகாமுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் வட-கிழக்குப் பகுதிகளில் நிலவும் யுத்தசூழ்நிலையினால் தமிழகத்திற்கு வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இதனால் மண்டபம் முகாமில் இடநெருக்கடி அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அவர்களுக்கான அகதிகள் பிற மாவட்டங்களில் உள்ள அகதி முகாமுக்கு மாற்றப்பட்டு வருவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன. (ச)

# விண்ணப்ப முடிவுத் திகதியை பிற்போடுமாறு கோரிக்கை

ஆசிரியர்களுக்கான பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா முழுநேர பயிற்சி நெறிக்கான அனுமதிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் திகதியை பிற்போட்டு வடக்குக் கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்களும் விண்ணப்பிப்பதற்கு வசதி செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா முழுநேர பயிற்சி நெறிக்கு ஆட்களை தெரிவு செய்வதற்கான அனுமதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் ஒக்டோபர் முதலாம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய வர்த்தமானி வடக்குக் கிழக்குப் பகுதிக்கு உரிய வேளையில் சென்றடையாமையால் வடக்குக் கிழக்கில் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் அனுமதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியவில்லை என்பதை சுட்டிக் காட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவானந்தன், விடயத்திற்குப் பொறுப்பான தேசிய கல்வியியற் கல்லூரிப் பணிப்பாளர் எஸ்.ஜப்பாவை நேரடியாகச் சந்தித்து கோரிக்கையை வலியுறுத்தும் மகஜரை சமர்ப்பித்து வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-5)

# புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுவது கட்டாயமாக்கப்படும்

## கல்வியமைச்சு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

சகல பாடசாலை மாணவர்களும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சைக்கும் உத்தேச எட்டாம் ஆண்டு புலமைப்பரீட்சைக்கும் தோற்றுவது கட்டாயமாக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவது கட்டாயமல்ல. எனவே அனேக மாணவர்கள் பிரபல்யமான பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவதை மட்டுமே நோக்காகக் கொண்டே இப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சைக்கு மேலதிகமாக 8 அல்லது 9 ஆம் தரத்தில் உள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சைகளை நடத்த கல்வியமைச்சு உத்தேசித்துள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சைகள் மூலம் கல்வியின் சிறப்பியல்புகள் மதிக்கப்படுவதுடன் அதன் தரமும் காண்பிக்கப்படுவதன் காரணமாக இவ்விரு பரீட்சைகளையும் கட்டாயப்படுத்த வேண்டும் என கல்வி நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக அவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# வெளிநாடுகளின் தலையீட்டை தடுக்க ஜே.வி.பியினால் புதிய முன்னணி அமைப்பு

(கொழும்பு)

இலங்கை விவகாரங்களில் வெளிநாடுகள்தலையிடுவதைத் தடுக்க புதிய முன்னணி ஒன்றை ஜே.வி.பி. உருவாக்கியுள்ளது.

'தேசத்தைப் பாதுகாப்பதற்கான கூட்டு முன்னணி' என்ற பேரில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஜே.வி.பியினர் அறிவித்தனர்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா குமாரதிஸநாயக்க, கே.வி.லால்கந்த மற்றும் எஸ்.கே.சுபசிங்க உள்ளிட்டோர் இதனைத் தெரிவித்தனர்.

இவர்கள் வர்த்தகக் கூட்டமைப்பு, இலங்கைத் தோட்டத் தொழிலாளர் ஒன்றியம், தேசிய பிக்கு முன்னணி, பல்கலைக்கழக மாணவர் அமைப்பு, தேசிய பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஒன்றியம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் ஒன்றியம் உள்ளிட்ட 12 அமைப்புக்கள் இதில் இணைந்துள்ளன.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிடுதல், தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தல், வெளிநாடுகளின் தலையீட்டைத் தடுத்தல் ஆகியவற்றுக்காக இந்த முன்னணி உருவாக்கப்பட்டுள்ளது. (ச)

# சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்!

## இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை



(சென்னை)

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து முன்னேற்றம் இருக்கும் என்று அமெரிக்கா நம்பிக்கை கொண்டிருப்பதாக இந்தியாவுக்கான தூதர் டேவிட் சி.முல்போர்ட் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுக் காலை தமிழக முதல்வர் மு.கருணாநிதியை சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

சுமார் அரைமணித்தியாலம் நடைபெற்ற இந்தச் சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முல்போர்ட், இந்தச் சந்திப்பின் போது தமிழ் நாட்டில் வர்த்தகம் மற்றும் தொழில் தொடங்குபவர்களை ஊக்குவிக்கும் விதமாக தமிழக அரசு செயற்பட்டு வருவதாகவும் இதற்காக தமிழக முதல்வர் மு. கருணாநிதியைத் தாம் பாராட்டியதாகவும் தெரிவித்தார்.

இலங்கை அகதிகள் இடம்பெயர்ந்து தமிழகம் செல்வது குறித்தும் அவர் பேசியுள்ளார். சமாதானப் பேச்சுக்களில் தொடர் முன்னேற்றத்தினூடாகவே இலங்கையில் வன்முறைகள் தொடராமல் தடுக்க முடியும்எனக் கூறியதுடன்,

நிலைத்த ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். அவ்வாறு நிகழ்ந்தால் இலங்கை அகதிகள் தமிழகத்திற்கு வரமாட்டார்கள் என்றும் அவர் கூறினார். (ச)

# விளக்கமறியல்

ஊர்காவற்றுறையில் கடந்த வாரம் 12 வயதுச் சிறுமியை பாலியல் வன்முறைக்குட்படுத்திய குற்றஞ்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்த நபரை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு [illegible] நீதிமன்ற [illegible] ஊர்காவற்றுறை பதில் நீதிவானுமாகிய இ.த.விக்னராஜா நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் உத்தரவிட்டுள்ளார். (ச-5)

# வாணி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செட்டித்தெரு ஸ்ரீ முருகன் சனசமூக நூல் நிலையத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு வாணி விழா நடைபெறவுள்ளது.

இதில் சிறுவர் நிகழ்ச்சிகள் நடைபெறும். அத்துடன் நல்லூரைச் சென்ற பிரபல ஓவியர் திரு.பெரியதம்பி சுப்பிரமணியத்தின் உருவப்படமும் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துவாக பிறந்த நாம் மற்ற மதங்களை சகோதர மதமாக கருதவேண்டும். அதேநேரத்தில் நமது கொள்கைகளை வளர்க்க தியாகம் செய்ய வேண்டும்.
—சுவாமி இராமதாசர்

வலம்புரி

# சரஸ்வதி பூஜைக்கான ஏற்பாடு ஏதும் உண்டா?

இந்துக்களின் விரதங்களில் நவராத்திரி விரதம் முதன்மையானது-முக்கியமானது.

'நவராத்திரி' என்ற விசேடிப்புப் பதத்தின் மூலம் ஒன்பது இரவுகள் வீரத்தையும் செல்வத்தையும் கல்வியையும் கருப்பொருளாகக் கொண்டு வழிபாடு செய்வது இந்துக்களின் மரபாகும்.

அவல், கடலை, அமுது படைத்து அன்னை பராசக்தியை துர்க்கையாக, இலட்சுமியாக, சரஸ்வதியாக வழிபடும் முறைமையை யாழ்.குடாநாட்டு மக்கள் இம்முறை அனுஷ்டிக்க முடியாமல் போயிற்று.

உணவுப் பொருள்களுக்கு நிலவக் கூடிய தட்டுப்பாடு ஒருபுறம் இருக்க, நவராத்திரி காலம் குறித்து, விரத அனுஷ்டிப்புக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் யாரும் நடவடிக்கை எடுத்ததாகவில்லை.

அரிசிக் கப்பல், மா கப்பல் என்பன கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தபோதிலும் அதில் அவல், கடலை, பயறு போன்றன எடுத்துவரப்படவில்லை.

இத்தகைய பொருள்களுக்கான பட்டியல் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு யாழ்.அரச அதிபரால் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் தெரிவிக்கப்படும் கருத்து யாதெனில், மேற்படி பொருள்களுக்கான பட்டியல் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அவை நவராத்திரி காலத்திற்குரியவை என சுட்டிக்காட்டப்படவில்லை என்பதாகும்.

என்ன செய்வது! இலங்கைத் திருநாட்டில் இந்து சமயம் இப்படி கீழ் இறங்கிப் போயுள்ளது. இந்துக்களின் மிக முக்கிய நவராத்திரி விரதம் ஆரம்பமானது முதல் முடிபுறுவதுவரை யாருக்குமே தெரியாமல் இந்த விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது எனில் அதற்குக் காரணம் இந்து சமயத்தின் மதத் தலைவர்கள் என்று அடித்துக் கூறலாம்.

அவர்களின் மௌனமே, நவராத்திரி பூஜையை யாழ்.குடாநாட்டு மக்கள் அனுஷ்டிக்க முடியாமல் போவதற்குக் காரணமாகும்.

கூடவே பாராளுமன்றத்திலும் சரஸ்வதி பூஜை அனுஷ்டிக்கப்படும் முன்னேற்றம் இருந்தபோதிலும் அது எப்போது நடைபெறுகிறது என்ற விடயம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் உட்பட அவருடன் சேர்ந்த அதிகாரிகளுக்கும் தெரியாமல் போனமை துரதிர்ஷ்டமே.

எதுவாயினும் இந்துக்களின் மத குருமார்- மதத் தலைவர்கள் தங்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்படும் வரை இந்து சமயம் கீழ் இறங்குவதைத் தடுக்கவே முடியாது.

# விவசாயிகளின் அலட்சியப் போக்கே விதைநெல் தட்டுப்பாட்டுக்கு காரணம்

## கமநல சேவைத் திணைக்களம் தெரிவிப்பு

கமநல சேவைத் திணைக்களத்தின் அறிவுறுத்தலை விவசாயிகள் அலட்சியம் செய்தமையே விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் என அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்போக நெற்பயிர் செய்கைக்குத் தேவையான விதை நெல் தேவைப்படும் விவசாயிகளை தங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான விதை நெல்லை பெற்றுக் கொள்வதை உறுதி செய்து கொள்ளுமாறு கமநல சேவைத் திணைக்களம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் அக்கோரிக்கையை பெரும்பாலான விவசாயிகள் அலட்சியப்படுத்தியதன் காரணமாகவே தற்போது விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தற்போதைய சூழ்நிலையில் இதற்கு மாற்றீடாக எவ்வித நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாகவும் கமநல சேவைத் திணைக்களம் கவலை தெரிவித்துள்ளது.

விதை நெல் இன்மையால் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை குறைக்குமாறு அமைச்சர் பௌசி கோரிக்கை



உலக சந்தையில் ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை சுமார் 5 அமெரிக்க டொலர்களால் குறைந்ததையிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தீர்மானத்திற்கு அமைவாக நுகர்வோரின் நன்மை கருதி பெற்றோல் மற்றும் டீசல் விலைகளை அரசாங்கம் குறைத்திருக்கின்றது.

ஆகவே அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளையும் குறைக்க சம்பந்தப்பட்டதரப்பினர் முன்வர வேண்டும் என்று போக்குவரத்து ரயில்வே மற்றும் பெற்றோலியத் துறை அமைச்சரான ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

அமைச்சின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிக்கும்போது விரும்பியோ விரும்பாமலோ உள்ளூரிலும் எண்ணெய் விலைகளை அதிகரிக்க வேண்டி நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. நாம் விலைகளை அதிகரிக்கும்போது பஸ் கட்டணங்கள் முதற்கொண்டு அரிசி, மரக்கறி, மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை எரிபொருள் விலை அதி கரிப்பைக் காரணம் காட்டி வர்த்தகர்கள் உயர்த்தினர்.

தற்போது நாம் பெற்றோல் ஒரு லீற்றருக்கு 2 ரூபாவாலும் டீசல் ஒரு லீற்றருக்கு 2 ரூபா 50 சதத்தினாலும்உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் குறைத்துள்ளோம். இதன்படி ஏனைய அத்தியா வசிய பொருள்களின் விலைகளை அதிகரித்தவர்களும் அவற்றின் விலைகளைக் குறைக்க முன்வர வேண்டும்.

மேலும் உலக சந்தையில் புதிய விலைக் குறைப்புகள் தற்போதே அமுலாகியுள்ளன. ஆனால் நாம் ஏற்கனவே பழைய விலைக்கு வாங்கிய கையிருப்பையே நுகர்வோரின் நன்மை கருதி உடனடியாக குறைந்த விலைக்கு வழங்க முடிவு செய்துள்ளோம்.

புதிய விலை குறைப்புக்கமைய நாம் கொள்வனவு செய்துள்ள எண்ணெய் எமக்கு வந்தடைய இன்னும் ஒரு வாரம் ஆகலாம். தற்போது இது சுமார் 1.5 பில்லியனாக குறைந் துள்ளது. உலக சந்தையின் இவ்விலைக்குறைப்பைத் தொடர் ந்து இத்தொகை எதிர்காலத்தில் 900 மில்லியனாக இன்னும் குறைவடையும் என எதிர்பார்க்கிறோம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# மீன்பிடித் தொழில் இன்மையால் 22 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

## வடமாகாண கடற்றொழிலாளர் கூ.சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மீன்பிடித் தடையின் காரணமாக 22 ஆயிரம் குடும்பத்தினர் பாதிப்படைந்துள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 18 ஆயிரம் குடும்பத்தினரும் அவர்களைச் சார்ந்த மீன்பிடியுடன் தொடர்புடைய பிற தொழில்களைச் செய்து வந்த 4 ஆயிரம் குடும்பத்தினரும் எவ்வித வேலைவாய்ப்போ வருமானமோ இன்றி தவிப்பதாக வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.தவரத்தினம் தெரிவித்தார்.

அவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை புனரமைப்புப் பணிகளிலோ அபிவிருத்திப் பணிகளிலோ ஈடுபடும் வாய்ப்பை அளிக்குமாறு அரச சார்பற்ற நிறுவனங்களை வேண்டிக் கொண்ட போதிலும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

தற்போது குருநகர்ப் பகுதியில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரண்டுமணித்தியால நேரம் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்ட போதிலும் சகல மீனவர்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்த முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து இவர்களுக்கான வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-133)

# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் 24 மணிநேர அம்புலன்ஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

இரவு நேர அம்புலன்ஸ் சேவையை வழங்குவதில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக செஞ்சிலுவைச் சங்கஅதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் மாத்திரமின்றி பிற இடங்களிலும் 24 மணிநேரம் அம்புலன்ஸ் சேவை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை வட்டுக்கோட்டை சங்கரத்தைக்குச் சென்று தமது அம்புலன்ஸ் வண்டி மூலமே தாயும் குழந்தையும் அழைத்து வரப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதிகாலை 2.45 மணிக்கு தொலைபேசி மூலம் கிடைத்த தகவலை அடுத்து தமது அம்புலன்ஸ்வண்டி 2.50மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இருந்து அழைப்புக் கிடைத்ததும் தாம் உடனடியாக புறப்படுவதாகத் தெரிவித்த அவர்கள் வெளி இடங்களுக்குச் செல்லும் போது பலாலி படைத்தலைமையகத்திற்கு அறிவித்த பின்னரே புறப்படுவதாகவும் கூறினர்.

இதேவேளை 24 மணிநேர அம்புலன்ஸ் சேவையைப் பெறுவதற்கு 222 2561, 222 9792 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமாறு கேட்டுக் கொண்டனர். (ச)

# காயமடைந்த மாணவியருக்கு வங்கிக் கணக்கு ஆரம்பிப்பு

செஞ்சோலை வளாகத்தில் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் காயமடைந்த மாணவியருக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வங்கிக்கணக்கொன்றை ஆரம்பித்து வைத்துள்ளனர். உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் தலைமையில் தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் நலதிட்டப் பணிப்பாளர் இராசா ரவி ஆரம்பித்து வைத்தார்.

இப்பாடசாலையில் 25 மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் விகிதம் வழங்கி இக் கணக்கு திறந்து வைக்கப்பட்டது. இம் மாணவிகளின் மருத்துவச் சிகிச்சைக்காகவும் எதிர்கால தேவைகளுக்காகவும் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைத்துள்ளன. (எ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு தொடர்பில் இரு தரப்பினரும் சாதகமான பதிலை வழங்கியுள்ளனர்

## நோர்வேத் தூதரகப் பேச்சாளர் எரிக் நேன்ஸ் பேர்க்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுவதற்கான சாதகமான பதிலை அரசாங்கமும் புலிகளும் நோர்வேயிடம் உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளனர்.

விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது என்று நோர்வே தூதரகத்தின் முதன்மைச் செயலாளரும் பேச்சாளருமான எரிக் நேன்ஸ் பேர்க் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

இணைத்தலைமை நாடுகள் பெல்ஜிய நாட்டின் தலைநகரான பிறஸல்ஸ் நகரில் இம் மாதம் 12 ஆம் திகதி நடத்திய மாநாட்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தடைப்பட்டுப் போயுள்ள சமாதான பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் முற்பகுதியில் எவ்வாறாயினும் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் இந்த நாடுகள் மிகவும் உறுதியாக இருக்கும் செய்தி இரு தரப்பிற்கும் நோர்வேயால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதன் பிரகாரம் ஜெனீவா பேச்சுக்களின் போது அரசாங்க தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கான குழுவிற்கு தலைமை தாங்கிய அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வாவை நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் இம் மாதம் 14 ஆம் திகதி சந்தித்து பேச்சுக்களை மீள ஆரம்பிக்க இணைத்தலைமை நாடுகளின் அழுத்தம் குறித்து விரிவாக விளக்கியுள்ளார்.

அதேபோன்று இம் மாதம் 22 ஆம் திகதி தூதுவர் பிரஸ்கர் கிளிநொச்சி சென்று புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக பேசினார்.

நீங்கள் ஆயுதங்களை கீழே வையுங்கள் அப்போதுதான் பேச்சுவார்த்தை என்றோ அல்லது நீங்கள் தாக்குதல்களை நிறுத்துங்கள், ஏ-9 பாதையை திறவுங்கள் என்பன போன்ற எந்த விதமான நிபந்தனைகளையும் இரு தரப்புமே முன்வைத்து இழுபறிப் படாமல் முதலில் இரு தரப்பும் நேருக்கு நேர் சந்தியுங்கள் பின்னர் அங்கு உங்களது பிரச்சினைகளைப் பற்றி பேசலாம் என இணைத் தலைமைகள் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்கமையவே இருதரப்பும் தாம் அவ்வாறானதொரு பேச்சுக்களுக்கு தயார் என தமது சம்மதத்தை தெரிவித்துள்ளனர் என்றார். (ச)

## தாக்குதல்கள் தொடர்வதால் ஏ-9 வீதியைத் திறக்கமுடியாதுள்ளது

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் இருந்து விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்துகின்றனர்.

தாக்குதல்கள் தொடர்வதால் ஏ-9 வீதியை உடனடியாகத் திறக்கமுடியாதுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் சிக்கியிருந்த மக்களில் 3 ஆயிரத்து 359 பேர் காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு கப்பல் மூலமாக வந்தடைந்துள்ளதுடன் திருகோணமலையில் இருந்து 984 பேர் யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வெளிமாவட்ட அரச ஊழியர்களை...

வெளி மாவட்டங்களில் கடமை யாற்றும் அரச ஊழியர்கள் பிரயாணம் செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. ஆகவே அரச ஊழியர்கள் மாத்திரம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பயண ஏற்பாட்டுடன் யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் செயலகத்திற்குச் சமுகமளித்து தமது விபரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மாகாண சபை ஆகிய இடங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் தத் தமது சேவை நிலையத்தில் உடனடியாகக் கடமையை மேற்கொள்ளுமாறு அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களால் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (ச)

## சாதகமான பதில் கிடைக்கும்வரை...

இறப்பு திருத்தச் சட்ட மூலத்தின் மீதான விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் டி.டி.எக்கநாயக்க இந்தியப் பிரதமரைச் சந்திக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புதுடில்லியில் காவல் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களால் சந்திக்க முடியாமல் திரும்பி வந்து இங்கே ஏதோ சத்தியாக்கிரகப் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் போராட்டமாவது வெற்றி பெறட்டும் என்று கேலியாக உரையாற்றினார்.

இதனை சுட்டிக்காட்டிப் பேசிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினின் அமைதிப் வழிப் போராட்டத்தை அரசாங்கம் உதாசீனப்படுத்துகிறது; கொச்சைப்படுத்துகிறது. தமிழ்த் தேசியத்துக்காக முன்னர் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களை அலட்சியப்படுத்தியமையால்தான் ஆயுதப் போராட்டமே உருவானது என்ற வரலாற்றை திரும்பி பார்க்க வேண்டும் என்று சாடினார். (ச-5)

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை...

தெரிவித்துள்ள போர் நிறுத்த கண்காணிப் புக்குழுவின் தலைவர் இதன் பின்னர் அப்பகுதியில் பாரிய வன்முறைகள் இடம் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மூதூர் பகுதி மீதான விடுதலைப்புலிகளின் நகர்வும், சம்பூரை நோக்கிய இராணுவத்தினரின் படை நகர்வும் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட பாரிய யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறலென்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் அத்துடன் கிளிநொச்சி,முல்லைத்தீவு மீதான விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கிபீர்த் தாக்குதல்களும் முகமாலை கிழக்குப் பகுதி நோக்கி படைநகர்வும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் நடவடிக்கை என்று தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினர்களையும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை உறுதியாகக் கடைப்பிடிக்குமாறு சர்வதேச சமூகமும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் கோரிக்கை விடுப்பதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## சமாதானப் பேச்சுக் குறித்து...

இலங்கை வரும் அவர்கள் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

ஒக்டோபர் தொடக்கத்தில் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை குறித்து இரு தரப்பினரிடமும் நோர்வேக்குழுவினர் விவாதிக்கவுள்ளனர். அவர்களது வருகை குறித்து இலங்கைக்கான நோர்வேத்தூதுவர்; அரசு, விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

முதலில் அரச அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் அவர்கள் அரசின் சாதகமான முடிபோடு கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இரு தரப்பினரும் விரைவில் சந்தித்துப் பேசுவதற்கான சாதகமான சூழ்நிலை உருவாகியிருப்பதாக ஒஸ்லோவில் வைத்து ஏ.எ ஃப்.பி. செய்தி நிறுவனத்திற்கு அளித்த நேர்காணலில் ஜோன் ஹான்ஸன் பௌயர் தெரிவித்தார்.

இலங்கையில் இரு தரப்பினரையும் சந்தித்த பின்னர் ஜோன் ஹான்சன் பௌயர் இந்தியாவிற்கும் செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தமிழர்களுக்கான சுயாட்சி உரிமை வழங்க வேண்டும் என்கிறார் பலோன்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களுக்கான சுயாட்சி உரிமை வழங்கவேண்டுமென்று அமெரிக்காவின் நியுஜெர்சி காங்கிரஸ் உறுப்பினர் ஃபராங்க் பலோன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தமும் அமைதி முயற்சிகளும் சீர்குலைந்து முழுஅளவிலான போரின் விளிம்பில் உள்ளது.

தொடரும் வன்முறைகளால் ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மைய மாதங்களில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2 இலட்சத்திற்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

வடக்கு கிழக்குப் பிரதேசத்துக்கான அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்வது முடக்கப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டுகின்றனர்.

போர் நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு அமைதி முயற்சிகள் மீள மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒக்டோபரில் ஒஸ்லோவில் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று இணைத் தலைமை நாடுகள் அறிவித்துள்ளமையை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம்.

பொதுமக்கள்,நிவாரணப் பணியாளர்கள் மற்றும் கண்காணிப்புக்குழுவினரது பாதுகாப்பை இரு தரப்பினரும் உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு பெரும்பான்மையான அந் நாட்டு மக்கள் ஜனநாயக வழித்தீர்வையே நம்புகின்றனர் என்று கருதுகிறோம்.அரசியல் சவால்கள் அனைத்தும் போரின் மூலம் தீர்க்கப்படமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ச)

## விசேட அதிரடிப் படையினர் ஹக்கீமுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றும் குழுவினருக்கு எதிராக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் வழக்கு தொடுக்கவுள்ளனர் என லங்கா தீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பொத்துவில், இரத்தல்குளம் பகுதியில் பத்து முஸ்லிம் மக்களை விசேட அதிரடிப் படையினரே படுகொலை செய்ததாக போலி குற்றச்சாட்டை சுமத்தி பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணியதாகவே இவ்வழக்கு தொடுக்கப்படவுள்ளது.

மேற்படி பத்து முஸ்லிம்களையும் படுகொலை செய்தவர்கள் குறித்து இரகசிய பொலிஸ் விசாரணைகளில் சாட்சியங்கள் கிடைத்துள்ளதாகவும், இரத்தல்குள சம்பவத்தில் காயமடைந்து சுகமாகி வரும் முஸ்லிம் நபர் தம்மைத் தாக்கியவர்கள் குறித்து பொலிஸாரிடமும் இரகசியப் பொலிஸாரிடமும் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

பத்துப்பேரின் படுகொலைகளை மேற்கொண்டவர் குறித்து தகுந்த சாட்சியங்கள் உள்ள போதும் அதனை விசேட அதிரடிப் படையினர் மீது சுமத்தி விசேட அதிரடிப் படையினரின் பெயருக்கு அபகீர்த்தி உண்டு பண்ண முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிரடிப் படையினர் நினைக்கின்றனர். இது சம்பந்தமான சட்ட ஆலோசனைகளை விசேட அதிரடிப்படையினர் பெற்றுள்ளனர்.

இதன் பேரிலேயே ரவூப்ஹக்கீம் உட்பட மற்றும் குழுவினருக்கு எதிராக வழக்கு தொடுக்க விசேட அதிரடிப்படையினர்தயாராகி வருவதாக தெரிய வருகின்றது என அச் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. (ச - 5)

## ஜே.வி.பியுடன்...

எம்.பி.க்களான காமினி ஜயவிக்கிரம பெரேரா, பந்துல குணவர்தன, வஜிர அபயவர்தன ,தி.மகேஸ்வரன் ஆகி யோர் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் ஜே.வி.பி.யுடன் பேச்சு நடத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பரிந்துரைகளை செய்யவுள்ளனர். இதற்கிணங்கவே பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச - 5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டா[illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org